

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

**2005**
**டிசம்பர்**

ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 6 கனி 01

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**




உங்கள் WIN TV -யில் ஒவ்வொரு புதன்
காலை 6.00 முதல் 6.30 மணி வரை பாருங்கள்
மற்றும்
உங்கள் வானொலியில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்
(கொழும்பு சர்வதேச வானொலி)
MW 873 Khz -ல் ஒவ்வொரு வியாழன்
காலை 7.15 முதல் 7.30 மணி வரை கேளுங்கள்.
கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



THE WORD OF CHRIST
P.O.BOX:5
BATLAGUNDU -624 202 S.INDIA

Phone:
04543 263278
Cell: 9443558041


**ஓர் நற்செய்தி!**

இம்மாத நிகழ்ச்சியில் **ArjunGlory** தம்பதியரின் கேள்விநேரத்தில் கேட்கப்படும் கேள்விகளை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி இம்மாதம் 29ம்தேதி அனுப்புகிறவர்களுக்கு 2006 க்கான காலண்டர் ஒன்று இலவசமாக அனுப்பப்படும்






## நேயர் கடிதங்களில் சில....

*சகோ.அர்ஜீனன் ஐயா அவர்களுக்கு, ஸ்தோத்திரம். நான் இன்று **WIN TV**–யில் தங்களது இச்சைஅடக்கம் எனும் தலைப்பிலான செய்தியைப் பார்த்தேன். நன்றி தங்கள் மாத இதழை இலவசமாகத் தர இயலுமா?*

***Mrs. C.Joy Christina, Madurai.***

*இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துகிறேன். தங்களின் வானொலி நிகழ்ச்சியைக்கேட்டேன் மிகவும் ஆசீர்வாதமாக இருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தங்கள் ஊழியத்தின் மூலம் வெளிவரும் 'ஒரே வழி ' மாத இதழையும் மற்றும் ஆவிக்குரிய புத்தகங்களையும் அனுப்பிவைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கெள்கிறேன். எங்கள் மாவட்டம் வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது ஜெபியுங்கள்.*

***C.அந்தோணிசாமி, கடலூர்.***



***Dear Brother in Christ,***

*I Want your book:The Voice of Truth International which is in ENGLISH language, shown in Today`s (30.11.2005) program on WIN TV (6.00 - 6.30 A.M) Today, you preached about Temperance, which was so good. Thank you for that message.*

***By, E.Joseph Devadoss Madurai.***

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

**"The Churches Of Christ salute you" Romans 16:16**


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 6 டிசம்பர் - 2005 கனி - 1


ஆசிரியருரை

## கிறிஸ்தவனும் உயிர்த்தெழுதலும்
## A Christian and The Resurrection



இயேசு சொல்கிறார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவா.1125). இயேசுவை நம்புகிறவனுக்கு இந்த நம்பிக்கையிருக்கிறது. இந்த நம்பிக்கை எல்லாரிடத்திலும் இருக்காது. இன்று உயிர்த்தெழுதலை நம்பாதவர்கள் இருப்பதுபோல அன்றும் இருந்தார்கள். அவர்கள் யாரென்றால் சதுசேயர்கள்.

இவர்கள் இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் நம்பாதவர்கள். அவர்களில் சிலர் இயேசுவினிடத்தில் வந்து: "போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனான். பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான். மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம்பண்ணினான். அப்படியே ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணி பிள்ளையில்லாமல் இறந்துபோனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம் பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிருப்பாள் என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்

படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை. அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" என்றார் (லூக்.20:28-36). இயேசுவினிடத்திலே இந்த கேள்வியை கேட்ட சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிறவர்கள். சரியான பதிலை கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்தார். இந்தப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள். உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவர்களோ அப்படி செய்வதில்லை அவர்கள் தேவதூதருக்கு ஒப்பாகவும், தேவனுக்குப் பிள்ளைகளாகவும் இருப்பார்கள்.

உயிர்த்தெழுதலிலே நம்பிக்கையில்லாத இந்த சதுசேயரைப் போன்றோருக்கு பவுல் எழுதுவதைக் கவனியுங்கள். "புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே நீ விதைக்கிறபோது இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார். எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம்வேறே, மிருகங்களுடைய மாம்சம்வேறே, மச்சங்களுடை மாம்சம்வேறே, பறவைகளுடைய மாம்சம்வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும்வேறே, மிருகங்களுடைய மாம்சம்வேறே, பறவைகளுடைய மாம்சம்வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும்வேறே; சூரியனுடைய மகிமையும்வேறே, சந்திரனுடைய மகிமையும்வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும்வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்" (1கொரி.15:35-42). விதை விதைக்கும்போது நாம் வெறும் விதையையே விதைக்கிறோம், தேவன் அதற்கேற்ற மேனியைக் கொடுக்கிறார். அதைப்போல மரித்த சரீரங்களை இப்பூமியிலே அடக்கம்பண்ணுகிறோம். தேவன் கிறிஸ்துவுக்குள் மரித்தோரை அவருடைய வருகையிலே எழுப்புவார். அவர்கள் அழிவில்லாதவர்களாய் எழும்புவார்கள். ஜென்மசரீரம் விதைக்கப்படும், அவருடைய வருகையிலே ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.

பவுல் உயிர்த்தெழுதலைக்குறித்து அநேகருடன் போராடி இருக்கிறார். அவர் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேன் என்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன் என்கிறார். மனுஷர்கள் சிலவேளைகளில் மிருகங்களைப்போல நடந்துகொள்ளுகிறார்கள் ஆகையால் இப்படிச் சொல்லுகிறார். இயேசுவும் ஒருமுறை அந்த நரிக்குப்போய்ச் சொல்லுங்கள் என்கிறார். ஏனென்றால் அந்த நரியைப்போல தந்திரமுள்ளவர்களாக இருப்பதாலே அப்படிச்சொல்லுகிறார்.

நாமும்கூட இப்படிப்பட்ட சமூதாயத்தில் வாழ்ந்து வருகிறோம். மனிதன் மிருக குணமுள்ளவர்களாக மாறுகின்றனர். இதனால் பவுல் அப்படிப்பட்ட மனுஷர்களோடு போராடினேன் என்றுசொல்கிறார். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாதவர்கள் இப்படியே இருக்கிறார்கள். ஒரு முறை ஸ்கைலாப் என்ற விண்கலம் விழப்போகிறது என்ற அறிவிப்பு கேட்டவுடன் தமிழகத்தில் உள்ள அநேகர் புசிப்போம், குடிப்போம் என்ற முடிவுக்கு வந்து நாம் நாளைக்கு சாகப்போகிறோம் நல்லபடியாக சாப்பிட்டு எல்லாம் அனுபவித்து சாவோம் என்று சொல்லி குடித்துகும்மாளம் அடித்ததார்கள். இப்படிப்பட்ட போதனை அநேகரை இன்னும் அதிகமாக பாவம் செய்யத்தூண்டுகிறது.

மேலும் பவுல் கூறும்போது: "கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லை யென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லா விட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லை யென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்ததோர் உயித்தெழுாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச் சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" என்கிறார் (1கொரி.15:12-17). தேவனுக்காக, பவுல் போன்றோர் கிறிஸ்து எழுந்தார் என்று பொய்சாட்சி சொன்னார்களா? அன்றைய நாட்களிலே இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்திருப்பேன் என்று சொன்ன வார்த்தையின் நிமித்தம் அந்த அரசு அவர் மரித்த பின்பு கல்லறைக்கு பலத்த காவல்போட அனுமதித்தது. அவர்கள் போய் கல்லுக்கு முத்திரைபோட்டு காவல்வைத்தார்கள். ஆனால் தேவதூதர்கள் கல்லைப் புரட்டிப்போட்டார்கள், அந்தச் சமயத்தில் காவலாளர் அவர்களுக்குப் பயந்து திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். இயேசு தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்.

**உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்கள் யார்?**

"பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோம.6:4,5). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு தகுதியானவர்கள் என்று பார்க்கிறோம். "அப்படியே நீங்களும்,

உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக் கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" (ரோம.6:11).


மேலும் ஆண்டவர் சொல்வதைக் கவனியுங்கள்: "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவா.11:26). உயிரோடிருக்கும் போது அவரை விசுவாசித்து திருமுழுக்கு பெற்றவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. ஆகையால் அவன் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்கிறார். இதைக்குறித்து வெளிப்படுத்தல் 20:6-ல் இப்படியாக வாசிக்கிறோம் "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம்வருஷம் அரசாளுவார்கள்" (வெளி.20:6). இப்பொழுதும் கிறிஸ்து நம்மை அரசாளுகிறார் அவருடைய ராஜ்யம் ஆவிக்குரிய ராஜ்யம். அவருடைய ராஜ்யத்திலே ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்" (2பேரு3:8).

**உயிர்த்தெழுதல் எப்படி நடக்கும்?**

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1தெச.4:16-17). முதலாவது, கிறிஸ்து இயேசுவுக்குள் மரித்தவர்களுக்கு முதலிடம் பின்பு உயிரோடிருக்கிறவர்களும் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்" (1கொரி.15:53). இதெல்லாம் எப்படி நடக்கும் என்று சந்தேகப்படுகிறவர்கள் கீழ்க்கண்டவசனத்தை கவனியுங்கள். எசேக்கியேல் தீர்க்க தரிசியைப் பார்த்து கர்த்தர், மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே தேவரீர் அதை அறிவீர் என்றான். நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரை என்றார். உரைத்தபோது எலும்புக்கு உரியவர்கள் உயிரடைந்து மகா பெரிய சேனையாய் நின்றார்கள். புதிய ஏற்பாட்டிலே மரித்து நாலு நாட்களாகிய லாசருவை இயேசு எழுப்பினார். அதைப்போல அவருக்குள் மரித்தவர்களை அவர் மகிமையிலே எழுப்புவார். கிறிஸ்தவனும் அவனுடைய உயிர்த்தெழுதலும் இப்படியே நடைபெறும். இதற்கு உங்களை ஆயத்தப்படுத்திவிட்டீர்களா? இல்லையென்றால் இன்றே கிறிஸ்துவுக்குள் வர முற்படுங்கள். கர்த்தர் உங்கள் முயற்சியை ஆசீர்வதிப்பாராக!

# அஸ்திபாரம் ஏன் மிக முக்கியமானதாயிருக்கிறது?
## Why The Foundation Is Important?

*J.C.Choate*



வெளிப்படையான இவ்வுலகில், ஒரு வீட்டைக் கட்ட, ஒரு மாடிவீட்டைக்கட்ட அல்லது அதிக நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென எதிர்பார்த்த ஏதோ ஒன்றினைக் கட்ட முற்படும் போது, இது ஒரு சரியான அஸ்திபாரத்தின் மேல் கட்டப்படுவது அவசியம் என நாம் அறிகிறோம். நம்முடைய வேலையில் அல்லது உத்தியோகத்தில் வெற்றியடையும்படிக்கு கல்விக்கான அல்லது பயிற்சிக்கான போதுமான பணத்தைப் பெறுவதின் மூலம் போதுமான ஆயத்தம் அவசியம் என நாம் உண்மையிலேயே விழிப்புடையவர்களாய் இருக்கிறோம். நாம் அஸ்திபாரத்தையோ அல்லது எதிர்காலத்திற்கான ஆயத்தத்தைப் பற்றிய முக்கியத்துவத்தையோ நாம் அலட்சியம் செய்யும்போது, சில துரதிஷ்டத்திற் குள்ளாகிறோம்.

நம்முடைய கர்த்தர் ஒரு சிறந்த ஆவிக்குரிய அஸ்திபாரத்திற்கான அவசியத்தை, கன்மலையின் மேல் தன் வீட்டைக்கட்டின, மற்றும் மணலின் மேல் தன் வீட்டைக்கட்டின இருவருக்கு ஒப்பிட்டுக் கூறுவதின் மூலம் விளக்கினார். இயேசு, "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான், பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (மத்.7:24-27).

தொடர்ச்சியான விளக்கத்தில் இயேசு, இந்த பூமிக்குரிய வீட்டைக் கட்டினவர்களில் ஒருவன் புத்தியுள்ள மனிதன் என்றும் இன்னொருவன், புத்தியில்லாத மனிதன் என்றும் போதிக்கிறார். அவர் சொல்லியபடி புத்தியள்ள, ஆவிக்குரிய வீட்டைக்கட்டினவன் கிறிஸ்து சொல்லுவதைக் கேட்டு அதின்படி

செய்கிறவனாய் இருக்கிறான் என காண்பிக்கிறார். அவன் ஒரு புத்தியுள்ள கட்டடக் கலைஞன் ஏனென்றால் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவன் கிறிஸ்துவின் மேல் கட்டுகிறான். அவன் கிறிஸ்துவினிடத்திற்கு வரும்வரைக்கும் பழைய பழக்கவழக்கங்களையும், பாரம்பரியங்களையும், உலகக்காரியங்களையும், மனுஷருடைய சமயப் போதனைகளையும் தோண்டிபுதைத்து, அவருடைய போதனைகளுக்கும், அவருடைய வழியினிடத்திற்கும் திரும்பி, அங்கே கட்டுகிறான். அதன் விளைவாக, அவன் அசையாத அஸ்திபாரத்தின் மேலிருக்கிறான். அவன் சத்தியத்தை உடையவனாயிருக்கிறான், அவன் கிறிஸ்துவை உடையவனாயிருக்கிறான். அவன் ஒரு கிறிஸ்தவனாயிருக்கிறான். அவன் கர்த்தருடைய சபை அங்கத்தினனாயிருக்கிறான். அவனை ஒன்றும் அசைக்கமுடியாது. அவர் கற்றுக்கொண்ட ஒன்றை விட்டுவிடாமல் உறுதியாகப் பற்றிக்கொண்டவனாயிருக்கிறான். அவன் நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையுடையவனாயிருக்கிறான்.

இயேசு பேசுகிற இன்னொரு மனுஷன் ஒரு புத்தியில்லாத கட்டடக்கலைஞன். அவனும் கிறிஸ்துவினுடைய போதனைகளைக் கேட்கிறான் ஆனால் அதற்குக் கீழ்ப்படிய தவறிவிடுகிறான். ஒருவேளை இவன் நம்பிக்கையற்றவனாயிருக்கலாம். அவன் அதிகமான சமயம் உண்டு என நினைத்திருக்கலாம். அவன் தான் தேவையான அளவு நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது அவன் மனுஷருடைய போதனைகளுக்குப் பின் செல்லுகிறவனாயிருந்திருப்பான். என்ன பிரச்சனையாயிருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிய தவறுகிறான் என்பது தான் உண்மை. ஆனபடியினால், அவன் முடிவிலே கட்டின கட்டடம் நிலைபெறாது. அவன் இழந்தவனாகவும் நித்திய அழிவைப் பெற்றவனாகவுமிருப்பான்.

நீண்ட நாட்களுக்கு முன்பாக அந்நாளில் சீயோனிலே கர்த்தர் அஸ்திபாரமிடுவார் என ஏசாயா சுட்டிக் காண்பிக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து ஆகும் என்றும் அது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் என்றும் கூறுகிறார். நாம் இந்த தீர்க்கதரிசன வசனத்தை வாசிப்போமாக. ஏசாயா, “ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும்; விசுவாசிக்கிறவன் பதறான்” (ஏசா.28:16) என்று சொன்னான். தயைகூர்ந்து அஸ்திபாரத்தைக் குறித்ததான இவ்விளக்கத்தை கவனியுங்கள். இது ஒரு கல்லாயிருக்கும், ஒரு பரீட்சிக்கப்பட்ட கல்லாயிருக்கும், ஒரு விலையேறப்பட்ட மூலைக்கல்லாயிருக்கும், மேலும் ஒரு திட அஸ்திபாரமுள்ள கல்லாயிருக்கும். வர்ணிக்கப்பட்டுள்ள இந்த வார்த்தையை பின்னர் நாம் புதிய ஏற்பாட்டில், இவையெல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறதாக காண்போம். ஆனால் சங்கீதக்காரனாகிய தாவீது சங்கீதம்

118:22,23-ல் பாடிய போது, "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்று இந்த அஸ்திபாரத்தைச் சுட்டிக்காட்டினார். நாமும்கூட புதிய ஏற்பாட்டில் இந்த தீர்க்கதரிசன வசனம் கிறிஸ்துவில் நிறைவேறினதாகக் காண்கிறோம்.

நாம் இயேசுவின் நாட்களுக்கு திரும்புகையில், இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? இதை மத்தேயு21:42-ல் வாசிக்கிறோம். லூக்கா20:17,18-ல் இயேசு பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் பேசுகையில், ".....வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார்". நேரிடையான ஒரு கல் அல்லது ஒரு கற்பாறையானது அஸ்திபாரத்திற்குப் பயன்படக்கூடியவையாயிருக்கிறது ஆனால் ஒருவன் அதில் தடுமாறி விழுந்தாலும் அல்லது அது அவன்மேல் விழுந்தாலும் அவன் நசுக்கப்படுவான் அல்லது கொல்லப்படுவான். அதைப்போல, அந்தக் கல் ஒருவன் மேல் விழுந்தால் அது அவனை அழித்துப்போடும். இன்னொரு வார்த்தையில், சரியானமுறையில் பயன்படுத்தும் போது அது ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் அதை அசட்டை செய்யும்போது அல்லது தவறாக பயன்படுத்தும்போது அது அழிக்கக்கூடிய சக்தியாக இருக்கும். ஆவிக்குரிய கன்மலையாகிய, கிறிஸ்துவோடு ஒப்பிடும்போதும் இதுவே உண்மையாயிருக்கிறது.

அப்போஸ்தலர் புத்தகத்திற்குத் தொடந்து செல்கையில், பேதுரு சொஸ்தமாக்கப்பட்டிருந்த ஒரு மனிதனைப்பற்றி பிரதான ஆசாரியர்களிடத்தும், தேவாலயத்துச் சேனைத்தலைவனிடத்தும் சதுசேயரிடத்தும் பேசுகிறதைக் காண்கிறோம். அவன், "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்.4:10-12). பவுல் இஸ்ரவேல் அல்லது

யூதர்களைக் குறித்து, "நீதிப்பிரமாணத்தைத்தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைவில்லை, இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று" (ரோம.9:31-33) இங்கே, நிச்சயமாக, பவுல் ஏசாயா 28:16 லிருந்து எடுத்துக்காட்டுகிறான்.

ஆனால் யார் அந்த கன்மலை அல்லது அஸ்திபாரம்? பவுல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1கொரி.3:11) என்றும் 1கொரிந்தியர் 10:3,4-ல் பவுல் மோசே காலத்து இஸ்ரவேலரைக் குறித்து, "எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே" என்றும் சொன்னான்.

எபேசு சபை கிறிஸ்தவர்களிடம் பேசுகையில், பவுல் "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்" (எபே.2:19-22) என்றான். இங்கே அப்போஸ்தலன் சபையாகிய தேவனுடைய குடும்பம் அல்லது தேவனுடைய பண்ணையாயிருக்கின்ற கிறிஸ்தவர்களைக் குறித்து பேசி, சபை எவ்வாறு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேசத்தினால் கட்டப்பட்டதென பேசிக்கொண்டிருக்கிறான். பொதுவான அஸ்திபாரம் மட்டும் முக்கியமல்ல, ஆனால் அஸ்திபாரத்தின் முக்கியமான பாகமே இதுதான், கிறிஸ்துவே அந்த அஸ்திபாரத்தின் பாகமென அவன் கூறினான். அந்த அஸ்திபாரமில்லாமல் பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய வீடு நிலைத்திராது. மீண்டும் பவுல், "தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" (1தீமோ.3:15).

தன்னுடைய காலத்து கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும்,

பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்பேல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே; இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிக்கிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன் மலையுமாயிற்று. அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" என்றான் (1பேது.2:8).

மீண்டும் ஏசாயா28:16-ல் எவ்வாறு கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாகி, சொல்லப்பட்டட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருந்தாரென இந்த எழுத்தர் காண்பிக்கின்றதை நம்மால் காணமுடிகிறது. யூதர்கள் மறுதலித்தவர்களாய் அஸ்திபாரத்தைக் குறித்துமட்டுமல்லாது அஸ்திபாரத்திற்கு மிக முக்கியமான பகுதியாகிய பிரதான மூலைக்கல்லைக் குறித்தும் இடறினார்கள். மேலும் பேதுரு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்தவர்கள் எவ்வாறு ஆசீர்வதிக்கப்பட்டவர் களாகவும், அவரை மறுதலித்தவர்கள் எவ்வாறு இழந்து போவார்கள் எனவும் வெளிப்படுத்துகிறார்.

மத்தேயு 16:13-19-ல் கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் உலகம் தம்மைக்குறித்து என்ன நினைக்கிறது ஏன்பது பற்றி கேட்டார். அதற்கு அப்போஸ்தலர்கள் சிலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றும் வேறுசிலர் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். ஆனால் கிறிஸ்து இதை எதிர்பார்க்கவில்லை. அவர் தம்முடைய சபையை இப்படிப்பட்ட விசுவாசமுள்ளவர்கள் மேல் கட்டவில்லை. பிறகு அவர் அப்போஸ்தலரை நோக்கி: அப்போஸ்தலர்கள் தம்மை குறித்து எனன நினைக்கிறார்கள் எனக்கேட்டார். அவர்கள் அவர் தேவனுடைய குமாரன் என தாங்கள் விசுவாசிப்பதாக விளக்கினார்கள். அதன் விளைவாக கர்த்தர் அதன்பின் தம்மை அவர்கள் தேவனுடைய குமாரன் என விசுவாசித்தார்கள் என்ற அந்த அறிக்கையின் மேல் தம்முடைய சபையைக் கட்டப்போவதாகச் சொல்லி பதிலளித்தார். அப்போஸ்தலர்

2-ல் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணினார்கள், மூவாயிரம் ஆத்துமாக்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்களை அவர் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்தார். ஆனால் அவர் எதன் மேல் சபையைக் கட்டினார்? சபை கிறிஸ்துமேல் கட்டப்பட்டது; அதாவது அவர் தேவனுடைய குமாரனாயிருந்தார் என்ற அந்த சத்தியத்தின் மேல் கட்டினார். இது மாத்திரமல்ல, ஆனால் சபை தொடர்ந்து, நமது ஜீவியம் பரியந்தமும் முடிய அந்த சத்தியத்தின் மேல் இளைப்பாறுகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் அல்ல என்று கடந்த காலங்களில் நிரூபிக்கப்பட்டிருக்குமானால்; பிறகு சபையானது பல நாட்களுக்கு முன்பாகவே வீழ்ந்துபோயிருக்கும் அல்லது நிலை நிற்காமல் போயிருக்கும். ஆனால் சபை தொடர்ந்து நிலைத்திருக்கிறது, கிறிஸ்துவே கன்மலையாகி, பிரதான மூலைக்கல்லாகி குமாரன் என்ற சத்தியத்தின் மேல் அஸ்திபாரமிட்டிருப்பதே அது நிலைத்திருப்பதற்கான ஒரே வழியாயிருக்கிறது. பவுல் சொல்லியபடி, அவரே உறுதியான அஸ்திபாரமாயிருக்கிறார்.

என்னுடைய நண்பரே, நீங்கள் எதனை கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் அவர் சொல்லுகிறதைக் கேட்டு, அதன்படி செய்தால், நீங்களும் கிறிஸ்துவின் மேல் கட்டமுடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவில் கொண்டுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால், கர்த்தர் உங்களை இரட்சித்து உங்களை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டுள்ள சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்.2). நீங்கள் ஞானவானாயிருப்பீரென்றால், இதைச் செய்யுங்கள். நீங்கள் அவ்வாறிருக்க நாங்கள் ஜெபிக்கிறோம்.

## பொது அறிவுச் சோதனை

1. பகலும் இரவும் சம அளவில் நீடித்திருக்கும் இடம் எது?
அ)துருவம் ஆ)வெப்ப பிரதேசம் இ)பூமத்தியரேகை
2. உலக அமைதிக்காக முதன்முதலில் நோபல் பரிசு பெற்றவர் யார்?
அ)ரூஸ்வெல்ட் ஆ)ஆங் சான் சூகி இ)பெர்த்தா வான் சாட்னா
3. முதன்முதலாக பஞ்சாயத் ராஜை அமல்படுத்திய மாநிலம் எது?
அ)பஞ்சாப் ஆ)ஹரியானா இ)ராஜஸ்தான்
4. தொண்டைப்புண் எந்த கிருமியினால் ஏற்படுகிறது?
அ)ஸ்ட்ரெப் டோகாக்கஸ் ஆ)மைகோ பாக்டீரியா இ)சால்மோனல்லா
5. இந்திய அணுசக்தி திட்டத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
அ)எஸ். என். போஸ் ஆ)சி. எஸ். சந்திரசேகர் இ)எச். ஜே. பாபா

விடைகள்: 1.பூமத்திய ரேகை 2.ரூஸ்வெல்ட் 3.ராஜஸ்தான்
4.ஸ்ட்ரெப்டோகாக்கஸ் 5.எச். ஜே. பாபா


பெண்கள் பகுதி

# அவர் இங்கே இல்லை.

# He is not here.

*J.Glory Arjunan*

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்று கல்லறையில் இல்லை. அவர் மரித்தோர் இருக்கிற இடத்திலும இல்லை. அப்படியானால் அவர் எங்கேயிருக்கிறார்?



அன்று மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் இயேசுவைத் தேடி கல்லறைக்குச் சென்றனர். அப்போது ஒரு தூதன் சிலுவையில் அறைப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை என்றான் (மத்.28:5,6). மேலும் அவன் அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள் என்றான் (மத்.28:7). இயேசுவும்கூட என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார் (மத்.28:10). அப்படியே 'பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள், சிலரோ **சந்தேகப்பட்டார்கள்'** (மத்.28:16). மேலும் மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் கர்த்தர் தரிசனமானார். அவள் சீஷர்களிடத்தில் போய் அந்த செய்தியை அறிவித்தாள். அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது **நம்பவில்லை.** அதன்பின் அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிற பொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; **அவர்களும் நம்பவில்லை.**

அன்பு சகோதரிகளே, இன்றைய நாளிலும் கூட அநேகர் இவ்வாறு நம்பாதவர்களாகவே இருக்கின்றனர். இயேசு சொன்னதையும் தூதன் சொன்னதையும் நம்பினவர்கள் அவரைக் கண்டார்கள். அதுவும் இயேசுவின் நாமத்தில் விசுவாசம் கொண்டிருந்த ஒருமனமுள்ளவர்களாகிய அந்த சீஷர்கள் அவரைக்கண்டார்கள். முன்னே தியானித்த வசனத்தில் அவருடைய நாமத்தில் கலிலேயாவில் ஒன்றுகூடினவர்கள் அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள். ஆம், அன்பானவர்களே, இன்னும் நீங்கள் இயேசுவே மெய்யான தேவனும், நித்தியஜீவனுமாயிருக்கிறார் (2யோவா.20) என்று நம்பவில்லை என்றால் நிச்சயமாகவே அவரைக் காணமாட்டீர்கள். இயேசுவின் நாமத்திலே கூடியிருக்கிறவர்களிடத்திற்குச் சென்று அவர்களோடே கூட நீங்கள் இயேசுவைக் கண்டுகொள்ளுங்கள். மாம்சபிரகாரமாக அல்ல.

மேலும் தேவனைக் காணமுடியாத எத்தனையோ ஸ்தலங்களுக்குச் சென்று தேவனைத் தேடிக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதரியே, உங்களுக்குச் சொல்லுகிறேன்,நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தால் நீங்களே தேவனுடைய ஆலயம். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.3:16,17) என வேதம் கூறுகிறது. ஆம், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்வீர்களானால் ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகிய அவர் உங்களில் வாசம்பண்ணுவார். அவர் உங்களில் வாசம்பண்ணுகிறபோது நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாகிறீர்கள். தேவனுடைய ஆலயமாகிய நீங்கள், இன்னும் சந்தேகங்கொண்டு தேவனை மரித்தோரிடத்தில் தேடாமல், ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களோடேகூட தேடி அவரைக் கண்டுகொள்ளுங்கள்.

தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். நீங்கள் அவருக்காக எப்பேர்பட்ட ஆலயத்தைக் கட்டப்போகிறீர்கள் என வேதம் கேள்விஎழுப்புகிறது. அப்படியிருக்க தேவனைக் காணும்படி புண்ணிய ஸ்தலங்களுக்கும், தேவாலயம் என அழைக்கப்படுகிற பெரிய பெரிய கட்டடங்களை நோக்கியும் நீங்கள் செல்வீர்களானால் உங்களை நீங்களே வஞ்சிக்கிறவர்களாயிருப்பீர்கள். காலத்தை விரயமாக்காதீர்கள். நிச்சயமாகவே அங்கே தேவன் இல்லை. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி.3:20) என்று உங்கள் இதயக் கதவை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவர் வந்து உங்களில் வாசஞ்செய்ய இடங்கொடுத்தால் அங்கே இயேசுவைக் காண்பீர்கள். இயேசுவுக்கு என் இதயத்தில் இடங்கொடுத்து எந்த சமாதானத்தைப் பெற்றேன் என்பீர்களாகில் நீங்கள் அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது குறித்தும், அவர் உயிர்த்தெழுந்து உங்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறார் என்பது குறித்தும் சந்தேகப்படுகிறீர்கள் என்று தான் அர்த்தம். அன்றைய நாளில், அப்போஸ்தலர்களும், சீஷர்களும் இயேசுவை உயிர்த்தெழுந்தவராகக் கண்டோம் என்று பல முறைகூறியும் அநேகர் சந்தேகங்கொண்டனர். அவர்கள் சந்தேகங்கொண்டதினால் இயேசு உயிர்த்தெழுந்து, அவர் நாமத்தில் கூடினவர்கள் மத்தியில் இருந்தும், இருப்பதும் பொய்யாகிவிட்டதா? ஏமாந்து போகாதீர். தேவனைத் தேட வேண்டிய இடத்தில் தேடி அவரைக் கண்டு பணிந்துகொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவோடு நித்திய நித்தியமாய் வாழும்படி அவரை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்காய் காத்திருப்போரை அழைத்துச்செல்ல இயேசு மீண்டும் வருகிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடிருப்பது எவ்வளவு உண்மையோ

அந்த அளவிற்கு அவர் மீண்டும் வரப்போவதும் உண்மை, உண்மை.உண்மை. அவரை சந்தித்து எதிர்கொண்டு போக ஆயத்தப்படுவோமாக!

அவர் நாமத்தினாலே கூடியிருக்கிறவர்கள் மத்தியிலும், அவரை தன் சொந்த இரட்சகராக தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு இப்பூமியில் வாழுகிறவர்கள் மத்தியிலும், தேவன் இருக்கிறார். "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). மரித்தோரிடத்திலே அல்ல!

## வேதஅறிவுப்போட்டி எண் 63-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1.துரும்பாயிருப்பார்கள் | -மல.4:1 | 6. நித்திய ஜீவனைக்குறித்து | -தீத்.1:3 |
| 2. அடக்கமுடையவளாயிருந்து | -1தீமோ.2:11 | 7. வல்லவராயுமிருக்கிறார் | -எபி.7:25 |
| 3. நியாயத்தை | -செப்.3:5 | 8. ஆம் | -2பேது.2:22 |
| 4. உங்களுக்கும் | -பிலிப்.1:30 | 9. நடத்துகிறார் | -தானி.4:35 |
| 5. ஒரு கோதுமை மணியும் | -ஆமோ.9:9 | 10. பரிசுத்தர் | -ஏசா.40:25 |

## பேசும் வேதாகமம் : 12



1. பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி, எவர்களின் வார்த்தைகளைப் புரட்டும்? – நீதிமான்களின் – யாத்.23:9.
2. ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது எது? – இரத்தமே – லேவி..17:11.
3. யாதொரு சிலையையும் நிறுத்த வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர் அதை என்ன செய்கிறார்? – வெறுக்கிறார் – உபா.16:22.
4. உலகம் யாருடைய கையில் விடப்பட்டிருக்கிறது? – துன்மார்க்கர் கையில் – யோபு9:24.
5. கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே; தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் எப்படிப்பட்டவர்கள்? – லேசானவர்கள் – சங்.62:9.
6. நீதி உத்தமமார்க்கத்தானை என்ன செய்யும்? – தற்காக்கும் – நீதி.13:6.
7. பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் எப்படியுள்ளவன் உத்தமன்? – பொறுமையுள்ளவன் – பிர.7:8.
8. அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை எப்படியுள்ளதாக்குவார்? – மகிமையுள்ளதாக்குவார் – ஏசா.43:21.
9. கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் எப்படிப்பட்டவன்? – சபிக்கப்பட்டவன் – எரே.48:10.
10. துன்மார்க்கன் தன் அக்கிரமத்தை விட்டுத் திரும்பி, நியாயமும் நீதியும் செய்தால், அவன் அவைகளினால் என்னாவான்? – பிழைப்பான் – எசே.33:19

# சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் - 39 D.எபிநேசர்

**தாவீது:** தொழுகையில் பிரசங்கம் அவசியம் என்பதை விளக்க அப்.8:26-39 ஆகிய வசனப்பகுதியில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். எத்தியோப்பியா தேசத்தில் இராஜகுலப் பெண்ணாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியாயிருந்த ஒருவர், ஒருநாள் எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்குச் சென்று கொண்டிருந்தார். பிரயாணத்தில் அவர் ஏசாயா புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். அப்போது பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவை அந்த மந்திரியைச் சந்திக்கும்படி கொண்டு சேர்த்தார். பிலிப்பு அவரிடம் சேர்ந்து "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.



**யோனத்தான்:** அதற்கு அந்த மந்திரி என்ன சொன்னார்?

**தாவீது:** அதைத்தானே சொல்ல வருகிறேன்! நீ கேட்ட கேள்விக்கு பதில் கூட அதுதான்! "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித்தெரியும்?" என்று கேட்டான். வேதத்தை வாசித்துக் கொண்டிருக்கிற ஒருவனுக்கு விளக்கம் சொல்லும்படி பரிசுத்த ஆவியானவரே வழி நடத்துகிறார் என்றால் பிரசங்கத்தின் அவசியத்தை இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். இந்த இடத்தில் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும்! பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டுத்தான் மந்திரி இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறார்.

**யோனத்தான்:** இயேசு கிறிஸ்து இதைக் கட்டளையாகவே கொடுத்திருக்கிறார். இல்லையா?

**தாவீது:** ஆம். அதை மத்.28:20 மற்றும் மாற்கு 16:15 ஆகிய வேத வாக்கியங்களில் காணலாம்.

**யோனத்தான்:** அந்த வசனத்தைப் படித்தே விடுகிறேன். "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்".

**தாவீது:** அதுமட்டுமல்ல. ரோம.10:14-ல் பவுல் இப்படியாகக் கேட்கிறார், "பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள். கேள்விப்படாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள்?" மேலும், 1கொரி1:17-23 ஆகிய வேத வாக்கியங்களில் "உலகமானது சுய ஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், (அவர்களால்) பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று" என்ற தேவனுடைய மாபெரும் விருப்பத்தை பவுல் அங்கே வெளிப்படுத்துகிறார்.

**யோனத்தான்:** சரி, அப்படியானால் இரட்சிக்கப்படுவதற்கு மட்டும் பிரசங்கம் போதுமல்லவா? இரட்சிப்பிற்கு பிறகும் எதற்கு சபையில் அதாவது தொழுகையில் பிரசங்கிக்க வேண்டும்?

**தாவீது:** ஏதோ உங்கள் பிரசங்கியார் மீது உனக்குக் கோபம் என்று நினைக்கிறேன். சரி, இதற்கும் பதில் என்ன என்பதை நமது அடுத்த சந்திப்பில் தெரிந்துகொள்ளலாம். அதுவரை கர்த்தர் தாமே அனைவரையும் காத்துக்கொள்வாராக! (மீண்டும் சந்திப்போம்)

**சபை.........கிறிஸ்துவின் மணவாட்டி**

**நம்முடைய கர்த்தர் பல மனைவிகளையுடைய ஒரு இருதார புருஷர் அல்ல.**

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து..." (எபே.5:25)

**சபை.........கிறிஸ்துவின் சரீரம்.**

**நம்முடைய கர்த்தர் ஒரு தலையையும், பல சரீரங்களையும் கொண்ட ஒரு அசாதாரணப் பிறவி அல்ல.**

"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ.1:18).

**சபை..........கிறிஸ்துவின் ராஜ்யம். அவருடைய பிரஜைகள் அனைவரும் ஒரே ராஜ்யத்தில் உள்ளனர்.**

"..........என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்: (மத்.16:18,19; கொலோ1:13).

**சபை..............கிறிஸ்துவின் குடும்பம். அது அவருடைய நாமத்தைத் தரிக்கிறது, அவருடைய ஜனங்கள் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.**

"இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு......" (எபே.3:14,5 ; ரோம.16:16; அப்.2:47).

**சபை..............அவருடைய இரத்தத்தினால் வாங்கப்பட்டது. அதில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா?**

எபே.5:25,26; 1பேது.1:18,19; எபி.13:8; கொலோ.1:19–24; கலா.3:26,27.

**-The Voice of Truth International**

## ஜெபியுங்கள்



- ✦ அடுத்தமாதம் நடைபெறவிருக்கிற கருத்தரங்கிற்காக...
- ✦ வருகின்ற புத்தாண்டை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாகவும், விசுவாசிகள் யாவரும் புதுபெலனை பெறும்படியாகவும்...
- ✦ வானொலி தொலைக்காட்சி ஊழியங்களை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தமைக்காக...
- ✦ கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்: சகோ.சேகர் ஈரோடு, சகோ.பிரபாகரன் நாமக்கல், சகோ.கோவிந்தராஜன் தஞ்சாவூர், சகோ.இராஜேந்திரன் கோவை இவர்களுக்காக...

# கிறிஸ்து பிறப்பா அல்லது கிறிஸ்துமஸா?

*G.வேலுசாமி*



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களை இப் பத்திரிக்கையின் வாயிலாக முதன் முதலில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் உலகமெங்கும் கொண்டாடபோகின்ற 'கிறிஸ்துமஸ்' பண்டிகையை கிறிஸ்வர்களாகிய நாம் கொண்டாடுவது சரியா அல்லது தவறா என்று தியானித்து பார்ப்போம்.

இயேசு என்பதின் அர்த்தம் **இரட்சகர்.** இயேசு என்பது தேவனால் கொடுக்கப்பட்ட பெயர் ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார் என்பது (மத்.1:21). மேலும் கிறிஸ்து என்பதின் அர்த்தம் **அபிஷேகம் பண்ணப்பட்டவர்** என்று வேதம் கூறுகிறது. பிதாவாகிய தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கி மனிதனையும் படைத்தார் என்று பார்க்கின்றோம். அந்நாட்களில் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது இப்படி பலி செலுத்திவிட்டு, மறுபடியும் பாவம் செய்ததினால் தேவன் அவற்றைப்போக்க ஒரே பலியாக தமது சொந்தக் குமாரனை நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதற்கு இப்பூமியில் பிறக்கச் செய்தார். இயேசுவின் பிறப்பு தேவனுடைய திட்டம். தீர்க்கதரிசனத்தில் உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாக நடந்தது (ஆதி.3:15; மத்.1:22).

இயேசு பிறந்தது உண்மை என்று வேதத்தில் பார்க்கும்போது இயற்கை சாட்சியாக உள்ளது (மத்.2:7). சாஸ்திரிகள் சாட்சி (மத்.2:1). இயேசுவின் பிறப்பிலிருந்து பெறப்படும் சத்தியம் 1. இயேசு பிறக்க பூமியில் எந்த வீடும் கிடைக்கவில்லை. பிறந்த பிற்பாடே சத்திரத்தின் முன்னனையில் இடம் கிடைத்தது (லூக்.2:6,7). 2. ஏழையின் பிரதிநிதியாக ஏழ்மையாக பிறந்தார் (லூக்.2:12). 3. மேய்ப்பர்கள் இயேசு என்னும் குழந்தையை சத்திரத்தின் முன்னனையில் பார்த்தார்கள். 4. சாஸ்திரிகளோ இயேசு என்னும் குழந்தையை வீட்டிலே பார்த்தார்கள் (மத்.2:11). இப்படியாக இயேசுவின் பிறப்பைப் பற்றி தெரிந்து கொள்கிறோம்.

**கிறிஸ்துமஸ் பண்டிகை:**

இயேசு கிறிஸ்து பிறந்தது உண்மை என்றாலும் டிசம்பர்25 என்பதற்கு ஆதாரம் இல்லை. வெளிநாட்டவர்கள் (பெண்கள்தினம், காதலர்தினம், தாய்மார்கள்தினம்) இதுபேன்ற அநேக தினங்களை முக்கியப்படுத்தி கொண்டாடுவது வழக்கமாயிற்று. அது போலதான் கிறிஸ்துமஸ் என்பது கி.பி 6-ம்

நூற்றாண்டு வரை கிடையாது. கி.பி 7-ம் நூற்றாண்டு முதல் 11-ம் நூற்றாண்டுவரை கிறிஸ்துமஸ் என்கின்றதான பண்டிகை ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மாதம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறவர்கள் ஒன்று கூடி பண்டிகையாக கொண்டாடினார்கள். கிறிஸ்துமஸ் என்பதின் அர்த்தம் என்னவென்று பார்த்தால் (கிறிஸ்து-மாஸ்) கிறிஸ்தவர்கள் ஒன்று கூடுவது ஆங்கிலத்தில் மாஸ் என்றால் கூட்டம் இதுபோல கொண்டாடி இன்று கிறிஸ்துமஸ் ஆக மாறியுள்ளது. இதுபோல் ஒவ்வொரு முறையும் கூடிவந்திருக்கையில் ரோமக்கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் ஆண்டவரின் கட்டளைக்கு இணங்கி வருடந்தோறும் டிசம்பர் 25-ம் தேதியன்று கிறிஸ்து பிறந்த தினம் என்றும் கிறிஸ்துமஸ் என்ற பண்டிகையாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், ஒருவேளை இயேசு டிசம்பர் 25 அன்று பிறந்து இருப்பார் என்றால் (லூக்.2:8-11) -ல் பார்க்கும்போது தேவதூதன் கிறிஸ்து பிறந்து இருக்கிறார் என்று மந்தையை காத்துக்கொண்டு இருக்கிற மேய்பர்களிடம் சொன்னார். மந்தையை மேய்ப்பவர்கள் பனிகாலத்தில் கூடாரம் போட்டு கொண்டு மேய்க்க மாட்டார்கள் வெய்யல் காலங்களில் தான் கூடாரம் போடுவார்கள். அப்படியென்றால் மார்ச் முதல் ஜீன் மாதத்திற்குள்ளாக இயேசுவின் பிறப்பு இருந்திருக்கக்கூடும் என்று கணிக்கிறார்கள். இப்படி ஒரு மதத் தலைவர்கள் ஏற்படுத்தின நாட்களை கிறிஸ்து பிறந்தார் என்று நாம் கொண்டாடி மகிழ்வது தவறாகும். ஏன் மதத் தலைவர்கள் இதனை செய்து இருக்கக் கூடும் என்பதற்குக் காரணம் இன்று ஆங்கில மாதம் ஜனவரி முதல் டிசம்பர் வரை போப் ஆண்டவர் இயற்றிய பெயர்தான். அதனைபற்றியும் பார்ப்போம். காலங்களை முதன் முதலாக வகுத்தவர்கள் எகிப்தியர்கள் தான். ஒவ்வொரு 30 நாட்களைக் கொண்ட 12 மாதங்களை வகையறுத்தவர்களும் அவர்கள் தான். அவர்களிடம் இருந்து ரோமர்கள் காலத்தில் தான் ஆண்டுகள் முறைப்படுத்தப்பட்டு வகையறுக்கப்பட்டன. ஜனவரி என்பது ரோமானிய கடவுளான ஜானஸ் என்ற கடவுளின் பெயரால் அழைக்கப்பட்டது. ஜனவரி ஆண்டின் முதலாவது மாதமானதால் ஜானஸின் பெயரில் இருந்து மாற்றப்பட்டது. பிப்ரோ என்ற லத்தின் வார்த்தையிலிருந்து ஆங்கிலத்தில் பிப்ரவரி என்று பெயர் வந்தது. ரோமானியப் போர் தெய்வமான மார்ஸ் என்னும் தெய்வத்தின் பெயரிலிருந்து மார்ச் என்று பெயர் பெற்றது. ஏப்ரிர் என்றும் சொல்லிலிருந்து ஏப்ரல் என்னும் பெயர்வைக்கப்பட்டது. ஏனென்றால் இதற்கு மொட்டுக்கள் மலர்தல் என்று பொருள். ஏப்ரலில் தான் வசந்தகாலம் வருகிறது. எனவே ஏப்ரல் பெயர்பெற்றது. ரோமானியக் கடவுளின் மையா என்ற பெயரிலிருந்து மே என்று பெயர் வழங்கப்பட்டது. இப்படியே 12 மாதங்களையும் போப் ஆண்டவர் பெயர் மாற்றியதால் டிசம்பர் 25 கிறிஸ்து பிறந்த தினம் என்று கட்டளை போட்டதால் இன்றுவரை கடைபிடித்து வருகிறார்கள். ஆனால் நாமோ தேவன் சொல்லாத ஒன்றை செய்யாது இருப்போம். வெளிப்படுத்தப்பட்டவைகளை நாம் பூரனமாகக் கைக்கொள்வோம்.

பெண்கள் பகுதி

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

# Is A Woman Required To Cover Her Head While Praying?

*-Betty Burton Choate*



ஸ்திரீயானவள் ஜெபம் பண்ணுகிறபோதும், ஆராதனை செய்யும்போதும் அவள் தலையை துணியால் அல்லது முக்காட்டினால் மூடிக்கொள்ள வேண்டியது அவசியம் என அநேகர் கூறுகின்றனர். சிலர் இது அவசியமல்ல என்றும் கூறுகின்றனர். இது 1கொரிந்தியர்11:3-16-ல் கூறப்பட்டுள்ள, தலையை மூடிக்கொள்வது பற்றிய கருத்தைத் தவறாகப் புரிந்துகொண்டதிலிருந்தும் தவறான மொழிபெயர்ப்பிலிருந்தும் ஏற்பட்ட குழப்பமே ஆகும்.

"ஆனால் ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று நான் விரும்புகிறேன்".

இப்பகுதியின் ஆரம்பத்தில், பவுல் அதிகாரத்தைப் பற்றிய கருத்தை முதலாவது வலியுறுத்துகிறார். நியமிக்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்படுத்தும் கருத்தை விளக்குகின்றபோது, தலையை மூடிக்கொள்ளுகிற இந்த தர்க்கமானது இரண்டாவது காரியமேயாகும். தேவனுடைய திட்டத்தில் சரீரத்தலையானது வெளிப்படையான ஒன்று. இது ஆவிக்குரிய தலைக்குக் கனத்தை அல்லது கனவீனத்தைக் கொண்டுவரக்கூடியது. இவ்வாறாக, ஒரு மனிதனின் தலை மூடப்பட்டிருக்கும்போது ஆவிக்குரிய தலையாகிய கிறிஸ்துவை கனவீனப்படுத்துகிறது. அடுத்தபடியாக, தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற ஒரு ஸ்திரீயானவள் அவளது தலையாகிய அவளது புருஷனை கனவீனப்படுத்துகிறாள்.

இப்பகுதி நமக்கு எதைப் போதித்த போதிலும், தேவன் ஏற்படுத்தியிருக்கிற அதிகார ஒழுங்கின் உண்மைத் தன்மையினைக் காண நாம் தவறிவிடக்கூடாது. நாம் உண்மையிலேயே எந்த விதமான மூடிக்கொள்ளுதலைப் பற்றிய தர்க்கம் என்ற கேள்வியை விவாதத்தில் எழுப்பலாம்; மேலும் நிச்சயமாக தேவன் இவ்விஷயத்தில் நம்மை மன்னிப்பார் என நினைத்து நேர்மையாகவோ, உண்மையாகவோ தவறான முடிவுக்கு வரலாம். ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்ற தெளிவான போதனையை நாம்

இழந்து விட முடியாது. ஏனெனில் இது தேவனுடைய மிக ஆழமான திட்டத்தின் உண்மைத்தன்மையை அசட்டை செய்வதற்கும் எதிர்ப்பதற்கும் வழிவகுத்து விடும்.

"ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம் பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக் கடவள் புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால், தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள்.

"புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு (மூடிக்கொள்வதற்குப் பதிலாக) முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே.

தலைமயிரை அலங்கரித்துக் கொள்ளும் முறையானது மனப்பூர்வமாகவும் தனியொருவருடைய உறவுபூர்வமாகவும் ஒரு வெளிப்படையான தோற்றத்தை ஏற்படுத்துகிறது என்பது தேவனுடைய கூற்றுமட்டுமல்ல. எல்லா கலாச்சாரமும் இதே போல் தலைமயிரை பராமரித்துக் கொண்டிருக்கின்றன. ஒருவனுடைய வாழ்க்கைமுறை, நம்பிக்கை, நல்நடத்தைக்குரிய அறநெறி, மற்றும் ஒருவனுடைய மதநம்பிக்கை போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு பூர்வத்தில் எப்படி தலைமயிரை பேணி வந்திருந்தார்கள் என்ற இந்த பாடத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிவதற்கு இது ஒரு ஆர்வமிக்க தெளிவான கூற்றாகும்.

பழைய ஏற்பாடு முழுவதிலும், புதிய ஏற்பாட்டு யூதர்களின் சூழ்நிலையிலும் தலையை 'மூடிக்கொள்ளாதது' என்பது சிரைக்கப்படுதலுக்கு சமமாக எண்ணப்பட்டது. லேவியராகமம் 10:1-ல் நாதாபும் அபியூவும் அவர்களது பாவத்தினிமித்தம் கொல்லப்பட்டபோது, தேவன் ஆரோனை துக்கத்தில் அவன் தலையை மூடிக்கொள்ளாதிருக்க அனுமதிக்கவில்லை; அவர்களது வழக்கத்தின்படி அவனது தலையை சிரைத்துகொள்ளுவதற்கு அவன் அனுமதிக்கப்படவில்லை. யோபு1:20-ல் எழுதப்பட்டுள்ளபடி யோபு தன்னுடைய பிள்ளைகள் கொடுமையான புயல்காற்றினால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டபோது, அவன் தனது வஸ்திரங்களைக் கிழித்து தன் தலையை சிரைத்துக் கொண்டான்.

ரோமாபுரியில் மரித்தவர்களை அடக்கம்பண்ணும் இடமாகிய பூமிக்கடியிலுள்ள நீண்ட தாழ்வாரங்களில் எண்ணற்ற செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களும், சித்திரங்களும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் அடையாளமாகயிருக்கிறது. அந்த சித்திரங்கள், அந்நாட்களில் வாழ்ந்த ஸ்திரீகள் சபை ஆராதனைக் கூட்டங்களில் முக்காடிட்டுக் கொண்டதாகச் சித்தரிக்கப்படவில்லை. அவர்களது தலைமயிரே அவர்களது முக்காடாகவும், மகிமையாகவுமிருந்தது.

இது இடைக்காலம் வரை நீடிக்கவில்லை, ரோம கத்தோலிக்க சபை பெருகத் தொடங்கின போது, அந்த வண்ண ஓவியங்களும், சிற்பங்களும் ஸ்திரீகள் ஆராதனையில் முக்காட்டினால் தலையை மூடிக்கொண்டிருப்பதாக சித்தரிக்கத் தொடங்கின. கத்தோலிக்க மார்க்கத்தினின்று பிரிந்த சில பிரிவினை சபைகளும் இந்த முறைமையை மத சம்பந்தப்பட்ட கட்டளையாக தொடர்ந்து கைக்கொண்டனர்

முதல் நூற்றாண்டில் கொரிந்து பட்டணத்து புறஜாதியாரின் கலாச்சாரத்தில், ஸ்திரீகள்... பெண் பூசாரிகளாகவும், மதசம்பந்தப்பட்ட வேசிகளாகவும் - அப்ரோதீத் என்ற பெண் தெய்வத்தை வணங்குகிறவர்களாய் இருந்த போதிலும் அவர்களது தொழிலுக்கு அடையாளமாக தங்களது முடியின் நுனியை கத்தரித்து அல்லது தங்களது தலையை சிரைத்துக் கொண்டார்கள். தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கும் இப்படிப்பட்ட வழக்கம் ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கு வெட்கம் நிறைந்ததாக இருந்தது. ஏனென்றால் அவள் அவளைப்பற்றியும் அவளது புருஷனோடுள்ள அவளது உறவு முறைப்பற்றியும் மற்றவர்களுக்கு உணர்த்தக் கூடியவளாயிருந்தாள்.

இதற்கு இணையாக இன்றைய நாளில் 'பலபின்னலாக' தலைமயிரைப் பிண்ணிக் கொள்ளுகிற ஸ்திரீகள் சமுதாயத்தின் கேட்டிற்கும் சீரழிவிற்கும் மூலகாரணமாயிருக்கிற இவர்களது இப்படிப்பட்டதான மாதிரியில் தங்கள் மயிரைப் பிண்ணிக் கொள்ள துணியும் கிறிஸ்தவ ஸ்திரீகளைப்பற்றி வெட்கமுண்டாகப் பேசப்படும். முடியை ஹிப்பியாக வைத்துக்கொள்ளுகிற முறையும் அதிகாரத்திற்கு எதிரிடையானதாகவும், ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்குமுறையைப் புறக்கணிக் கிறதாகவும் இருக்கிற வெளிப்படையான தோற்றத்தை உண்டாக்குகிறது.

"புருஷன் ஸ்திரியிலிருந்து தோன்றினவனல்ல, ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள். புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள். ஆகையால் தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள்(அடையாளமாக) தலையின் மேல் முக்காடிட்டுக் கொள்ளவேண்டும்.

"ஆகிலும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.

"......ஆகையால் தூதர்களினிமித்தம்...." என்பதன் பொருள் என்ன? இது விழுந்து போன தூதனாயிருந்தது - சாத்தான் - ஏவாளிடத்தில் வந்து அவளை தேவனுக்குக் கீழ்ப்படியாதபடி நடத்திச் சென்றவன். ஏனென்றால் சாத்தானும் அவனுடைய தீங்கிழைக்கும் தூதர்களும் இன்னும் உலகத்திலிருந்து கொண்டு, மனிதவர்க்கத்தை இன்னும் சோதித்துக் கொண்டிருக்கிறபடியினால், ஆவிக்குரிய உலகில் இருப்பது போல மாம்ச உலகத்திலும் 'ஒரு ஸ்திரீயின் தலை மூடப்பட்டிருப்பது ஒரு அடையாளமாக இருக்கிறது எனக் கூறப்படுகிறது. ஏனென்றால் அவள் தனது புருஷனின் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்'.

புருஷனுக்கும் ஸ்திரீக்குமுள்ள உறவுமுறை பற்றிய அடுத்த விவாதமானது, இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதாக விளக்குகிறது. ஆரம்பத்தில் தேவனுடைய கட்டளைப்படி உண்டான சிருஷ்டிப்பின் ஒழுங்கில் ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து உண்டாக்கப்பட்டவளாயிருந்த போதிலும், தொடர்ந்து உருவான மனிதவர்க்கமானது ஸ்திரீயின் மூலமே உலகத்தினுள் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆனபடியினால் முடிவு என்னவென்றால் புருஷன், ஸ்திரீ இருவரும் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பது முக்கியமானது என்றபோதிலும் முடிவாக சகலமும் தேவனிடமிருந்து வந்தது.

"ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில், தன் தலையை மூடிக்கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக்குமோ? என்று உங்களுக்குள்ளே நிதானித்துக் கொள்ளுங்கள். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீனமாயிருக்கிறதென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறதென்று சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே (கிரேக்க மூல வாக்கியத்தில், 'நீளமான மயிர் முக்காடிட்டுக் கொள்வதற்குப் பதிலாக அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது' என இந்த சொற்றொடர் விளக்குகிறது).

"ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்"

இன்னொரு மொழிப்பெயர்ப்பில் இந்த வசனங்கள் நீண்ட தலைமயிரை உடையவனாய் ஜெபம் பண்ணுகிற அல்லது தீர்க்கதரிசனம் கூறுகிற ஒவ்வொரு புருஷனும் தன் தலையை கனவீனப்படுத்துகிறான். மேலும் தன் தலையை மூடிக்கொள்ளாது ஜெபம் பண்ணுகிற அல்லது தீர்க்கதரிசனம் கூறுகிற ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள்...... அவள் "தலை சிரைக்கப்பட்ட பெண்களில்" ஒருவளைப் போலிருக்கிறாள். ஒரு ஸ்திரீ தன் தலையை மூடிக்கொள்ளாமலிருந்தால், அவள் குட்டையான தலை மயிரை கொண்டவளாய் இருக்கட்டும். ஆனால் ஒரு ஸ்திரீ தன் தலைமயிரைக் கத்தரித்து அல்லது சிரைத்துக்

கொண்டிருப்பது அவளுக்கு வெட்கமாயிருக்கிறபடியால், அவள் மறுபடியும் தன் தலைமயிரை வளர்த்துக் கொள்ளக்கடவள். ஒரு புருஷன் இவ்விதமாக நீளமான தலைமயிரை உடையவனாயிக்க வேண்டியதில்லை எனக் குறிப்பிடப்படுகிறது" (The Narrated Bible, F.Lagand Smith).

இதன் முழுப்பகுதியும் "மூடப்பட்டிருத்தல்", "மூடப்படாதிருத்தல்" மற்றும் "மூடிக்கொண்டிருத்தல்" என்பதாக விளக்குகிறது. அதாவது ஸ்திரீன் தலை முழுவதும் மூடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மூல கிரேக்கபாஷையானது ஸ்திரீகள் அணிந்துகொள்வதற்குரிய முக்காட்டுத் துணியை பற்றி பேசவில்லை. இது ஒரு செயற்கை முக்காடு - ஒரு வஸ்திரம். நூற்றாண்டுகளினூடே பல்வேறுபட்ட சமயப் பாரம்பரியங்களுக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி மூல வாக்கியத்தில் "குறிப்பிடப்பட்டு" உள்ளது. இந்தக் காரியத்தைக் குறித்துப் படிக்கின்ற வேளையில் நமது மனதிலிருந்து இப்படிப்பட்டதான பாரம்பரியங்களை முழுவதும் தள்ளிவிட்டு உண்மையிலேயே வேதாகமத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு நெருக்கமான கவனம் செலுத்துவோம்.

வ்சனம் 15 விளக்குகிறது, "ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாயிருக்கிறது; தலைமயிர் அவளுக்கு (முக்காடிடுவதற்குப் பதிலாக) முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் எதிர்பார்க்கிறபடி அவள் முழுவதும் மூடிக்கொண்டிருக்கத்தக்கதாக அவளுடைய நீண்ட தலைமயிரானது கொடுக்கப்பட்டிருக்கிறது. முக்காட்டிற்குப் பதிலாக அவளது தலைமயிரே ஒரு இயற்கை முக்காடக கொடுக்கப்படுகிறது. இந்த குறிப்பான வசனத்தில் 'முக்காடிட்டுக் கொண்டிருத்தல்' என்ற வார்த்தைக்கு கிரேக்க வார்த்தை முக்காடாகும். தையர் என்பருடைய 'Greek - English Lexicon'-ல் சுற்றிலும் தொங்கலான துணியாலான முக்காடு என விளக்கப்படுகிறது. ஆர்வமிக்க இந்த வார்த்தை "துணியாலான முக்காடே பயன்படுத்தப்பட்டதாக இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. இந்தக் கூற்று, ஸ்திரீயினுடைய நீளமான தலைமயிரானது முக்காட்டிற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாகும்.


தொடரும்.....

**வேதஅறிவுப்போட்டி எண் 63-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை | D.யேசுதாஸ் | -சித்தூர் (A.P) |
| S.சாம்பிச்சை | -மதுரை | V.கோவலன் | -மதுரை |
| P.முத்துசாமி | -நாராணபுரம் | C.H.வித்தியா ராணி | -சென்னை |
| S.ஆனந்தராஜ் | -ஈரோடு | G.செபஸ்டியன் | -திண்டுக்கல் |
| G.கிரேஸ்ஜெயா | -வெள்ளகுளம் | Sis.குளோரிபெளல்ஜா் | -சென்னை |
| E.பீட்டர்சாலமோன் | -கோவை | J.ஜேக்கப் சகாயமேரி | -புதுக்கோட்டை |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | N.கமலவேணி | -சென்னை |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | T.பூபதி | -க.பரமத்தி |
| A.சேவியர்மேரி | -மதுரை | R.டைட்டஸ் | -சென்னை |
| Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ் | -மதுரை | A.எலிசபெத் | -சென்னை |
| N.தானியேல்தமிழ்வாணன் | -மேல்விஷாரம் | | |

## வத்தலக்குண்டு வேதாகமக்கல்லூரி

ஒருவருடப்பயிற்சிக்கு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. கீழ்க்கண்ட மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். (ஆண்டவருக்கு ஊழியம் செய்யவிருப்பமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)



நீலகிரி, கடலூர், விருதுநகர். மற்றும் அருகில் உள்ள மாவட்டத்தை சார்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

கல்வி தகுதி: 10-ம் வகுப்பு. ஆண்களுக்கு மட்டும், போதனை தமிழ் ஆங்கிலம் வழி.

பயிற்சி காலம் ஒரு வருடம். உணவு உறைவிடம் இலவசம்.

பயிற்சி காலம் முடிந்தவுடன் உங்கள் பகுதியிலே கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஓர் அருமையான வாய்ப்பு.(பயிற்சி காலங்கள் டிசம்பர் 05 முதல் நவம்பர் 06முடிய)

விண்ணப்பித்து பின்பு, அனுமதிபெற்று வரவும்.

போன்: 04543 - 263278 அல்லது செல்: 9443558041 *நிர்வாகி*


# வேதாகம ஆலோசனை

***"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்"(நீதி.1:4-6)***

***வேதாகம ஆராய்ச்சி பாடம்-2***

***2. சத்தியத்திற்குக் கீழ்ப்படி:***

*"கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்கிறார் சாமுவேல் தீர்க்கதரிசி (1சாமு.15:22). சவுல் ராஜா கர்த்தருடைய வார்த்தையை புறக்ணித்தபடியால் இவ் வசனத்தைச் சொன்னார். சத்தியம் என்பது தேவனுடைய வார்த்தை. அதை புறம்மேதள்ளலாகாது, அதற்கு கீழ்ப்டியாமல் சடங்காச்சாரங்களிலும் பாரம்பரியங்களிலும் நூதனமாய் தோன்றிய வழிபாடுகளிலும் சென்றால் தேவகோபத்திற்கு ஆளாவீர்கள். சத்தியத்திற்கு விரோதமாக யாரும் நிற்கலாகாது.*

*இதே சாமுவேல் சிறுபிராயத்தில் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டவுடன் 'சொல்லும் அடியேன் கேட்கிறேன்' என்றான். அதனால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலையும் அதன் பின்பு தாவீதையும் ராஜாவாக அபிஷேகித்தான். தாவீது வம்சத்திலே இயேசு அவதரித்தார். அவர் சத்தியபரராக எங்கும் சுற்றிதிரிந்தார். அவருடைய சத்தியத்திற்கு செவிசாய்த்து பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்டு மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். பின்பு சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ சத்தியத்தை பிரசங்கித்தார்கள். இன்றுவரை உலகமெங்கிலும் அநேகர் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.*

சிறுவர் பகுதி

# அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள்

***வேதவாசிப்பு: யோவான்6:24-29***

ஒரு முறை ஜனங்கள் இயேசுவைத்தேடி வந்தார்கள். அப்பொழுது கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: மிகுந்த அக்கரையினால் அவரை விசாரிப்பதுபோல ரபீ, நீர் எப்பொழுது இங்கே வந்தீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர் என்னசொன்னார் தெரியுமா? நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அன்றைய நாட்களில் இயேசு ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் ஐயாயிரம் பேருக்கு கொடுத்து போஷித்ததைக் கண்ட ஜனங்கள், மீண்டும் அப்பத்தை கொடுப்பார் என்று அவரை நாட ஆரம்பித்தனர். இன்றைய நாட்களிலும் உணவுக்காக இயேசுவை பின்பற்றுகிறவர்களைப் பார்க்கிறோம். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று நம் ஆண்டவர் சொன்ன வார்த்தையை அநேகர் நம்பாமற்போகிறார்கள்.

ஆகையால் தான் இயேசு அவர்களைப்பார்த்து அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். அப்படியானால், நாங்கள் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். அதற்கு இயேசு: தேவனை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

இன்றைக்கு தேவனை நீங்கள் முதலாவது நம்பவேண்டும். அவரால் எல்லாம் கூடும் என்று விசுவாசிக்கவேண்டும். இதுதான் கிரியையுள்ள விசுவாசம். உணவு நம் எல்லோருக்கும் தேவை என்பதை நம் பரம பிதாவாகிய தேவன் அறிந்திருக்கிறார். இந்த உணவு நாம் சரீரத்தில் இருக்கும்வரை நமக்குத் தேவை. ஆனால் நித்திய ஜீவன்வரைக்கும் நிலைநிற்ககூடிய போஜனம், அவருடைய வசனமே. அதற்கேற்ப கிரியை நடப்பிக்கவேண்டும். நடப்பிப்பீர்களா!

**மனப்பாட வசனம்:**
"அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்" (யோவா.6:27).

## வேத அறிவுப் போட்டி எண்.64

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.*

1. சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றவர் யார்?
2. கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம்மட்டும் உன்னிடத்தில் என்ன செய்யலாகாது?
3. எவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின?
4. ஆரோனின் கோல் துளிர்விட்டு, பூப்பூத்து, எப்பழங்களைக் கொடுத்தது?
5. பாவம் பெருகின இடத்தில் எது அதிகமாய்ப் பெருகிற்று?
6. என் மரணத்திற்குப்பின்பு எவ்வளவு அதிகமாய்க் கலகம்பண்ணுவீர்கள் என்று இஸ்ரவேல் சபையார் எல்லாருங்கேட்க இந்தப் பாட்டின் வார்த்தைகளை சொன்னவன் யார்?
7. கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே எதுவும் உண்டு?
8. கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே யாருக்கு தம்மை வெளிப்படுத்தினார்?
9. கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் என்ன செய்யாதிருக்கவேண்டாம் என்று யார் எழுதுவது?
10. கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் எவர்களைக் கைவிடுவதில்லை?

### நடப்புச் செய்திகள்

① இயற்கைப் பேரிடர்களைச் சமாளிக்க இந்தியாவில் புதிய நடைமுறையை அமல்செய்வதற்கான மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல்.

② பேருந்து காட்டாற்றில் அடித்துச்செல்லப்பட்டது. ஒரே ஊரைச் சேர்ந்த 20 பேர் பலி.

③ நாட்டில் 600 மாவட்டங்களில் சுகாதாரநலச்சங்கங்கள் அமைக்கப்பட உள்ளன. மத்திய சுகாதார அமைச்சர் அன்புமணி தகவல்.

④ பீகாரில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது.

⑤ தமிழகத்தில் 28 மாவட்டங்களில் கிராம வேலைவாய்ப்பு திட்டத்தை அமல்படுத்துவதற்காக மத்திய அரசு ரூ96 கோடியே 2லட்சத்து 49 ஆயிரம் மானியம் அளித்துள்ளது.

Owned and published by B.Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: **B.Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2003-2005 Lincensed to Post without prepayment - License No.TN/WPP-25/SR/2003-2005 Posted at Batlagundu Post Office on 10th Dec. 2005



எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கிறோம்.

**கிறிஸ்துவின் சபை**

17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: 04543-263278 செல்: 9443558041
E-mail:arjunglory@yahoo.co.in




"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

'ஒரே வழி' தபால்வழி வேதபாடதிட்டம்

**The Master Course**

தமிழில்
இருபது வயதிற்கு மேற்பட்டவர்கள்
இன்றே ரூ.15/- செலுத்தி
இப்பாடத்திட்டத்தில் சேர்ந்து ஒரு வருடத்தில் முடித்து
Certificate பெற்றுக்கொள்ளுங்கள்

**THE ONE WAY**
**BATLAGUNDU BIBLE COLLEGE**
P.O. Box.5, BATLAGUNDU - 624 202
S.INDIA




**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**

மாத இதழின் ஆண்டு சந்தா
இந்தியா -ரூ.50/-
வெளிநாடு - ரூ.500/-
தனிப் பிரதி - ரூ.5/-

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202
S. India